# அறிக்கையிடலில் தனித்து ஈடுபடுதல்

## பாதுகாப்பு வழிமுறைகள்

Internews
Local voices. Global change.

தொடர்ச்சியான சிவில் ஆர்ப்பாட்டங்களை அறிக்கையிடும் போது, மீண்டும் மீண்டும் தனித்து அறிக்கையிட வேண்டிய நிலை ஏற்படும். சக பணியாளர்களுடன் இணைந்து அறிக்கையிடும் சந்தர்ப்பத்தில்கூட, அந்த இடத்திலிருந்து நீங்கள் தனியாக பணியாற்றக்கூடிய அல்லது தனித்து செல்லக்கூடிய வாய்ப்புகள் அதிகம். எனவே ஊடகவியலாளர்கள் தனியாக அறிக்கையிடலில் ஈடுபடும்போது ஏற்படக்கூடிய ஆபத்துக்களை மதிப்பிடுவதும், அவற்றைத் தணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் கட்டாயமாகும்.

## தயார்படுத்தல்

நீங்கள் ஏற்கனவே எதிர்கொள்ளும் பாதுகாப்பு அபாயங்கள் அல்லது வெளியிடப்படவுள்ள செய்தி அறிக்கை காரணமாக ஏற்படக்கூடிய பாதுகாப்பு தொடர்பான அபாயங்களை, மீண்டும் அறிக்கையிடுவதற்கு முன்பதாகவே மதிப்பிட்டுக்கொள்ளுங்கள். புதிய பணியை ஏற்றுக்கொள்வதற்கு முன்பாக, அதனை மதிப்பீடு செய்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும்.

நீங்கள் மேற்கொள்ள இருக்கும் பணி மற்றும் அதன் சாத்தியமான தாக்கங்கள் தொடர்பாக மேற்பார்வையாளர்கள் மற்றும் அன்புக்குரியவர்களுடன் கலந்துரையாடவும்.

இடம், போக்குவரத்து மற்றும் அறிக்கையிடலில் ஈடுபடும் நேரம் உள்ளடங்கலாக, அறிக்கையிடும் இடம் என்பன உங்களுக்கு அபாயங்களை உருவாக்குமா என்பதை மதிப்பிடுங்கள். அவ்வாறான நிலைமை ஏற்பட்டால், அவற்றைத் தணிக்கும் நடவடிக்கைகள் உங்களிடம் உண்டா?

ஆர்ப்பாட்டக்காரர்கள், பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் பார்வையாளர்கள் போன்ற போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தரப்பினர் உங்களுக்கு பாதுகாப்பு தொடர்பான ஆபத்துகளை ஏற்படுத்துகின்றனரா? இவ்வாறானதொரு களத்திலிருந்து நீங்கள் எவ்வாறு அறிக்கையிடுவீர்கள் என்பதை திட்டமிடுங்கள்.

உங்களுடன் சேர்ந்து அறிக்கையிடுவோர் யார்? அவர்களை நம்ப முடியுமா? களத்தில் இருக்கும்போது, நீங்கள் ஒருவரையொருவர் தொடர்புகொள்ள எவ்வாறு திட்டமிட்டுள்ளீர்கள்? ஆபத்து நிறைந்த இடங்களில் இருந்து அறிக்கையிடும்போது, சக பணியாளர்களை உங்கள் பார்வை எல்லைக்குள் வைத்திருப்பது பாதுகாப்பானது.

சாதனங்கள் மற்றும் தொடர்புகொள்ளும் திட்டத்தை செயற்படுத்தவும். இது நம்பிக்கைக்குரிய சக பணியாளர் அல்லது அன்புக்குரியவர் அல்லது இரு தரப்பினருடனுமாக இருக்கலாம். இத்திட்டமானது, வழமையான நேர இடைவெளியில் செய்தி அனுப்பும் ஒரு இணைப்பை உருவாக்க வேண்டும். இதன்போது உங்களுக்கு உதவக்கூடிய ஒருவர், உங்கள் நகர்வுகள் மற்றும் அறிக்கையிடல் சூழ்நிலைகள் பற்றி அறிந்துகொள்வார்.





ஏனையோரிடமிருந்து பிரிந்து செல்லல் அல்லது அவர்களுடனான தொடர்பு இல்லாமல் போதல் போன்ற திடீர், அதிக ஆபத்துள்ள சூழ்நிலைகள் மற்றும் பணயக் கைதிகளாகும் சூழ்நிலைகளை சமாளிக்க பாதுகாப்பு மற்றும் தொடர்பாடல் நெறிமுறைகளை உங்களது பிரவேசத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளவும்.

இணையத்தில் நீங்கள் உலாவியமை பற்றிய தகவல்கள் மற்றும் பாதுகாப்பில் கவனம் செலுத்துங்கள். சமூக ஊடகத்தளங்கள், குழுக்கள் மற்றும் செய்திப் பரிமாற்ற செயலிகளில் நீங்கள் எவ்வாறு ஈடுபடுகின்றீர்கள் என்பதில் கவனமாக இருங்கள். இடங்களைக் கண்டுபிடிக்க பயன்படுத்தப்படும் சேவைகளை எவ்வாறு பயன்படுத்துகின்றீர்கள் என்பதிலும் அவதானமாக செயற்படுங்கள்.






உங்களது உபகரணங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். செய்தி அறிக்கையிடலுக்காக வெளியில் செல்லும்போது, அவசியமான பொருட்களை மாத்திரம் கொண்டுசெல்லுங்கள். உங்கள் உபகரணங்களுக்கு காப்புறுதி உண்டா? ஆம், எனின் எந்த வகையான காப்பீடு? காப்புறுதி செய்யாதவிடத்து, உங்கள் உபகரணங்களுக்கு சேதம் ஏற்பட்டால், அதன் இழப்பை ஈடுகட்டுவது யார்?

உங்கள் உடல், உள ஆரோக்கிய நிலைமைகளை மதிப்பிடுங்கள். அறிக்கையிடல் காரணமாக உங்கள் உடல், உள நலனை மோசமாகப் பாதிக்கும் நிலைமைகள் ஏற்பட்டிருப்பின், அவற்றை நீங்களாகவே மதிப்பிடுங்கள். தேவையேற்பட்டால் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.





உங்கள் அறிக்கையிடலுக்கு எவ்வாறு உதவுவீர்கள் என்பதற்கான திட்டங்களை ஏற்படுத்தி, அவ்வப்போது புதிய விடயங்களை சேர்த்துக் கொள்ளுங்கள். இந்தத் திட்டங்களில் நிதி நிலைமைகள், பொருட்கள் மற்றும் தளவாட வசதிகள் என்பன உள்ளடங்கியிருக்க வேண்டும்.

உங்கள் அறிக்கையிடல் எவ்வளவு நீண்டதாக இருந்தாலும், அதிகத் தேவையைக் கொண்டிருந்தாலும், ஓய்வின்றி உங்களால் பணியாற்ற முடியாது. ஆகவே, வழமையான உங்களது நீண்ட மற்றும் குறுகிய இடைவேளைகளை திட்டமிட்டு செயற்படுத்துங்கள்.



# களத்தில் / அறிக்கையிடும்போது

ஆர்ப்பாட்டக் களத்திற்குச் செல்வதற்கு முன்பாக, நீங்கள் எவ்வாறான போக்குவரத்து சேவையை பயன்படுத்தப் போகின்றீர்கள் என்பதில் கவனம் செலுத்துங்கள். பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவது பாதுகாப்பானதா? தனியாக வாகனத்தை செலுத்திச் செல்வது பாதுகாப்பானதா? பயண நேரம் மற்றும் நீங்கள் செல்லும் பாதைகளை அவதானியுங்கள். திரும்பி வருவதற்கான போக்குவரத்து முறை பற்றியும் கருத்திற்கொள்ளவும்.

நீங்கள் அறிக்கையிடச் செல்லும் விடயத்தின் உள்ளடக்கம் பற்றிய தெளிவைக் கொண்டிருப்பது அவசியம். உங்களுக்கு அவசியமான விடயங்கள் கிடைத்தவுடன் அங்கிருந்து சென்றுவிடுங்கள். அதிக ஆபத்துள்ள இடங்களில் அதிக நேரம் தங்கியிருக்க வேண்டாம்.

பயணத் திட்டங்கள், வேலை அட்டவணைகள் மற்றும் நம்பகமான சக மற்றும் / அல்லது அன்புக்குரியவருடன் தொடர்பில் இருத்தல் போன்றன உள்ளடங்கலாக, அன்றைய நாள் அறிக்கையிடலுக்கான பாதுகாப்பு நெறிமுறைகளைத் தயார்படுத்துங்கள். அந்த நெறிமுறைக்கமைய செயற்படுங்கள்.

உங்கள் செய்தியை எங்கிருந்து தொகுக்கப் போகின்றீர்கள்? அந்த இடம் பாதுகாப்பானதா? உங்களது வீடு அல்லது அலுவலகத்தைத் தவிர வேறு இடத்திலிருந்து நீங்கள் பணியாற்றுகின்றீர்கள் என்றால், அந்த இடத்தின் பாதுகாப்பு மற்றும் அந்த இடத்தை யாரெல்லாம் பகிர்ந்துகொள்கின்றனர் என்பது பற்றியும் எப்போதும் அவதானமாக இருக்கவும்.

அறிக்கையிடலுக்காக உங்களது பாதுகாப்பையோ அல்லது ஏனையவர்களது பாதுகாப்பையோ எந்த சூழ்நிலையிலும் விட்டுக்கொடுக்க வேண்டாம்.

முக்கியமாக, நீங்கள் தனித்து மேற்கொள்ளும் அறிக்கையிடல் சார்ந்த பணிகளை முன்பே திட்டமிட்டுக்கொள்ளுங்கள். இதனுடன், முழுமையான திட்டங்கள், நெறிமுறைகள் மற்றும் அபாய மதிப்பீடுகளை முக்கிய காரணியாக கருதிக் கொள்ளவும்.